



# ஹர ஹர சங்கரா




FREE COPY

Nov - 2024

Vol. 4 - ISSUE 01


# KODAMBAKKAM TIMES



# சமித்து

சமித்து என்பது ஹோமகுண்டத்தில் சேர்க்கப்படும் குச்சிகள். ஒவ்வொரு சமித்து குச்சிக்கும் ஒவ்வொரு வேண்டுதல்களும் பலன்களும் உள்ளன.

**வில்வம் சமித்து :** சிவனுக்கும், மஹாலட்சுமிக்கும் பிடித்தமானது

**துளசி சமித்து :** நாராயணனுக்குப் பிடித்தது

**அத்தி சமித்து :** சுக்கிரனுக்குப் பிடித்தது

**நாயுருவி குச்சி :** புதனுக்குப் பிடித்தது

**பலாமர சமித்து :** சந்திரனுக்குப் பிடித்தது

**அரசமர சமித்து :** குருவிற்குப் பிடித்தது

**வன்னிமர சமித்து :** சனீஸ்வரனுக்குப் பிடித்தது

**அருகம் புல் :** விநாயகருக்கும், ராகுவுக்கும் பிடித்தது

**மாமர சமித்து :** சர்வமங்களங்களையும் சித்திக்கும்

**பாலுள்ள மரத்தின் சமித்துக்கள் :** வியாதி நாசினி

**தாமரை புஷ்பம் :** லஷ்மிக்கும், சரஸ்வதிக்கும் பிடித்தது

**மாதுளை மர சமித்து :** அழகான வடிவமும், வசீகரமும் கிடைக்கும்

**சமித்து குச்சிகளும் பலன்களும் :**

அத்திக் குச்சி : மக்கட்பேறு, நாயுருவி குச்சி : மகாலட்சுமி கடாட்சம், எருக்கன் குச்சி : எதிரிகள் இல்லாத நிலை, அரசங் குச்சி : அரசாங்க நன்மை, கருங்காலிக் கட்டை : ஏவல், பில்லி சூனியம் அகலும், வன்னிக் குச்சி : கிரகக் கோளாறுகள் நீங்கிவிடும், புரசங் குச்சி : குழந்தைகளின் கல்வி வளர்ச்சி, வில்வக் குச்சி : செல்வம் சேரும், அருகம்புல் : விஷபயம் நீங்கும், ஆலங் குச்சி : புகழைச் சேர்க்கும், நொச்சி குச்சி : காரியத்தடை விலகும்.

# விழாக்களும் விரத பலன்களும்

**கந்தசஷ்டி விழா :** ஐப்பசி அமாவாசையை அடுத்து வரும் ஆறு நாட்கள் கொண்டாடப்படும் திருவிழா கந்தசஷ்டி விழாவாகும். முருகனின் அறுபடை வீடுகளிலும் கந்தசஷ்டி விழா கொண்டாடப்பட்டாலும் சூரசம்ஹாரம் நடைபெற்ற இடமான திருச்செந்தூரில் இவ்விழாவானது மிகவும் சிறப்பாக ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது. தேவர்களையும், உலகிலுள்ள நல்லுயிர்களையும் காக்கும் பொருட்டு சிவனிடத்திருந்து தோன்றி, கார்த்திகை பெண்களால் வளர்ந்து, சக்தியிடத்து வேல் பெற்று சூரனை வதம் செய்வதே சஷ்டியில் சூரசம்ஹார விழாவாக கொண்டாடப்படுகிறது. சஷ்டி விரதத்தின் பலனானது நம் இன்னல்களை நீக்கி இன்பத்தை அருள வல்லது. இதற்கு உதாரணம் "சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்" என்று இத்திதியை வைத்து உருவான பழமொழியே ஆகும். சஷ்டியில் முருகனை நினைந்து மனமுருகி விரதம் இருந்தால் (அகப்பை) கருப்பையில் குழந்தை பேறு கிடைக்கும் என்பதை சித்தர் கூறிய வாக்கு மூலம் அறிந்து நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். கந்தசஷ்டி விரத பலனானது நம் வாழ்வில் தோன்றும் அனைத்து இடர்களையும் களைந்து உயர் நிலை அடையச் செய்யும்.

**துலா ஸ்நானம் :** ஐப்பசி மாதத்தை தமிழில் துலா மாதம் என்பார்கள். துலா என்றால் தராசு. தராசு தன் முள் மூலம் எப்படி நடு நிலையை காட்டி நிற்கிறதோ அது போல பகல், இரவு இரண்டையும் சமமாக கொண்டுள்ளதால் ஐப்பசி மாதம் துலா மாதம் என்று அழைக்கப்படுகிறது. ஐப்பசி எனப்படும் துலா மாதத்தில் காவேரியில் நீராடுவதை துலா ஸ்நானம் என்று விவரிக்கிறது புராணம். இம் மாதத்தில் பூவுலகிலுள்ள அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும், பதினான்கு லோகத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களின் தேவதைகளும் காவிரி நதியில் சங்கமம் ஆவதால், காவிரியில் (ஐப்பசி நீராடுதல்) துலா ஸ்நானம் மகத்தான பலன்களை வழங்கும் என்கிறார்கள். தெற்கே ஓடுகின்ற காவிரியை தட்சிண கங்கை என்று போற்றுகிறார்கள். துலா ஸ்நான முதல் நீராடலை திருச்சிக்கு அருகேயுள்ள திருப்பராய்த்துறையிலும், இரண்டாவது நீராடலை ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் படித்துறையிலும், ஐப்பசி கடைசியன்று மயிலாடுதுறை நந்திக் கட்டத்திலும் நீராட வேண்டும் என்பது ஐதீகம். துலா ஸ்நானம் செய்து பின்னர் நம் முன்னோர்களை வழிபட்டு அன்னதானம், வஸ்திர தானம் செய்தால் நம்முடைய பித்ருக்களின் ஆசியினை பெறலாம், காவிரியில் ஐப்பசி மாதத்தில் துலா ஸ்நானம் செய்தால், இறுதி காலத்தில் எமவாதனையின்றி முக்தியும் அடையலாம் என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**அன்னாபிஷேகம் :** எங்கும் நிறைந்திருக்கும் பரம் பொருள் அன்னத்தின் வடிவில் இருப்பதாக சொல்லப்படுகிறது. இறைவனின் அருவுருவமான லிங்க மூர்த்திக்கு அன்னம் சார்த்தி வழிபடும் நாளே அன்னாபிஷேக நாள். ஐப்பசி பௌர்ணமி நாளாகும். அம்பிகையின் தந்தையான தட்சனின் சாபத்தினால் தன்

கலைகள் தேய்ந்து மூன்றாம் பிறைக்கு வந்ததைக் கண்ட சந்திரன் அபயம் தேடி ஈசனை தஞ்சம் அடைய, அவரும் மூன்றாம் பிறை சந்திரனை தூக்கித் தன் சிரசில் சூடிக் கொண்டார். இன்று முதல் உன் கலைகள் ஒவ்வொன்றாகத் தேயவும், பின் வளரவும் செய்யும் என்று அருளினார்.

ஆயினும் ஐப்பசி மாத பௌர்ணமி அன்று மட்டும் உன் பூரண 16 கலைகளுடன் நீ மிளிர்வாய் என ஆசி வழங்கினார். இத்தகைய சிறப்புடைய ஐப்பசி பௌர்ணமி நாளில் தான் சிவனுக்கு அன்னாபிஷேகம் நடைபெறுகின்றது. நவக்கிரகங்களில் சந்திரனுக்கு உரிய தானியம் அரிசி. எனவே அரிசியை கொண்டே அன்னம் செய்து அன்னாபிஷேகம் செய்கிறோம்.

ஐப்பசி அன்னாபிஷேகத்தன்று செய்யப் பெறும் ஒவ்வொரு சாதப் பருக்கையும் சிவலிங்கம் ஆகும். அன்று ஈசனை தரிசிப்பதால் கோடி லிங்க தரிசனம் செய்த பலன் கிட்டும் என சான்றோர்கள் கூறுகிறார்கள். இக் காட்சியை கண்டவர்களுக்கு வாழ்வில் அனைத்தும் வசமாகும்.

எம் பெருமானை தரிசித்தவர்களுக்கு மீண்டும் பிறவி வாய்க்குமோ? என்றால் வாய்க்காது என்கிறார் அப்பர் பெருமான். திருமேனியைச் சுற்றியுள்ள அன்னத்தை தயிர் சாதமாக்கிப் பிரசாதமாக வழங்குவார்கள். குறிப்பாக குழந்தைப் பேறு வேண்டுவோர் இந்த பிரசாதத்தை உண்பதன் மூலம் நல்ல குணமுள்ள குழந்தைகள் பிறப்பார்கள் என்பது நம்பிக்கை.

நம்முடைய ஆன்மீக திருவிழா மற்றும் விரதங்களின் பலனை அறிந்து அவற்றை நாமும் கடைபிடித்து வாழ்வில் உயர் நிலை அடைவோம்.

........ ஹேமலதா க்ருஷ்ணகுமார்


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

**K K NAGAR & VADAPALANI EDITION**

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

Please contact : 93826 82128 / 89390 70034

E-mail : kodambakkamtimes@yahoo.com




# ஸ்ரீ காஞ்சீ பரமாசார்ய பாதுகா பஞ்சகம்

1. கோடி சூர்ய ஸமாநாபாம் காஞ்சீ நகர சந்த்ரிகாம்
பஜாமி ஸததம் பக்த்யா பரமாசார்ய பாதுகாம்

2. ஸக்ருத் ஸ்மரண மாத்ரேண ஸர்வைஸ்வர்ய ப்ரதாயினீம்
பஜாமி ஸததம் பக்த்யா பரமாசார்ய பாதுகாம்

3. ஸம்ஸார தாப ஹரணீம் ஜன்ம து:க விநாஸனீம்
பஜாமி ஸததம் பக்த்யா பரமாசார்ய பாதுகாம்

4. வைராக்ய ஸாந்தி நிலயாம் வித்யா விநய வர்த்தனீம்
பஜாமி ஸததம் பக்த்யா பரமாசார்ய பாதுகாம்

5. காஞ்சீபுர மஹா க்ஷேத்ர காருண்யாம்ருத ஸாகரீம்
பஜாமி ஸததம் பக்த்யா பரமாசார்ய பாதுகாம்

பாதுகா பஞ்சக ஸ்தோத்ரம் ய: படேத் பக்திமான் நர :
ஸர்வான் காமான் அவாப்நோதி முச்யதே ஸர்வ கில்பிஷாத்



# வேதம்

வேத அர்த்தம் சொல்பவனுக்கு தெரியாவிட்டாலும் உரிய தேவதைகளுக்குத் தெரியும்.

வேத சப்தத்தை உச்சாடணம் பண்ணுவது எப்படி தபஸோ அப்படியே கேட்பதும்.

வேதம் சொன்னால் புரியாது, புரியாத வேதத்தைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் வருவதே பெரிய ஏற்றம். வேத சப்தம் நம்மை கேட்கப் பண்ணுகிறது.

**அதர்வண வேதம் சொல்கிறது :**

இங்கிருந்து ஒருவர் கோவிலுக்குப் போய் பகவானைச் சேவிக்கிறார். பகவான் இவரைப் பார்த்தாரா என்று எப்படி தெரிந்து கொள்வது? பகவான் இவரை அனுக்ரஹித்தானா என்பதற்கு வேதம் ஒரு அளவுகோல் சொல்கிறது. ஓரிடத்தில் வேத பாராயணம் நடக்கிறது, வேத சப்தத்தைக்கேட்டு அங்கே போய் அவர் உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டு கேட்கிறார்.

**வேதம் சொல்கிறது :**

எப்போது வேதத்தைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு வேத பாராயணத்தைக் கேட்கிறாரோ அப்போது பகவான் அவரைப் பார்த்து விட்டான் என அர்த்தம்.

**பகவான் பார்த்தான் என்பதற்கு அளவுகோல் எது?**

வேதத்தைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுதல், வேதத்தைக் கேட்க ஒருத்தருக்குப் பிடிக்கவில்லை என்றால் இன்னும் பகவானின் கடாக்ஷம்

அவனுக்கு கிடைக்கவில்லை என்று அர்த்தம்.

பகவானிடத்தில் த்வேஷம் இருந்தால் கூட அவன் பொறுத்துக்கொள்வான். வேதத்தின் மீது த்வேஷம் இருந்தால் ஒத்துக் கொள்ள மாட்டான். நாம் வேதத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

நரசிம்ம அவதாரத்தின் முன்பு பகவான் சொன்னான் "யதா வேதேஷூ" என்று எவன் வேதத்தை நிந்திக்கிறானோ அவன் சீக்கிரம் நாசத்தை அடைவான் என்றான்.

அர்த்தம் தெரியா விட்டாலும் வேதத்தைக் கேட்க வேண்டும். கேட்க வேண்டும் என்ற அபிப்பிராயம் நமக்கு இருக்க வேண்டும். அர்த்தமே தெரியா விட்டாலும் பரவாயில்லை. இது எப்படி சரியாகும் என்று ஒரு கேள்வி வரும்.

வேத மந்திரங்களுக்கு அர்த்தம் தெரியாமல் ஒருவர் ஹோமம் பண்ணுகிறார். அப்போது பலன் சித்திக்குமா என்றால் சித்திக்கும் என்கிறது வேதம். பிரம்மச்சாரி உபநயனத்தின் போது பிக்ஷாடணம் (பிச்சை) எடுக்கக் கற்றுக் கொள்கிறான். அதற்கு அவனுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டின் முன்பும் "பவதி பிஷாந்தேஹி" என்கிறான்.

இவனுக்கு சமஸ்கிருத பாடம் ஆரம்பிக்கவில்லை, ராம சப்தம் கூட தெரியாது. "தாங்கள் பிச்சை இடுங்கள்" என்ற அர்த்தமும் தெரியாது. ஆனால் அதை சொல்லக் கற்றுக் கொண்டுள்ளான். அவனுக்கு என்ன தெரியும்?

"பவதீ பிஷாந்தேஹி" என்று கூக்குரலிட்டால் பாத்திரம் நிறையும். வீட்டுக் கதவைத் திறந்து வந்து அந்த வீட்டுப் பெண்மணி பாத்திரத்தில் அரிசியை இடுகிறாள் பாத்திரம் நிறைகிறது.

ப்ரம்மச்சாரி அர்த்தம் தெரியாமல் சொல்கிறான். ஆனாலும் பாத்திரம் எப்படி நிறைகிறது என்றால், இவனுக்குத் தெரியாமல் போனாலும் வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியும். அது போல், வேத மந்திரத்திற்கு அர்த்தம் நமக்கு தெரியாவிட்டாலும் தேவதைகளுக்குத் தெரியுமாதலினால் அவர்கள் ஓடி வந்து நாம் கொடுப்பதை ஸ்வீகரித்து நமக்கு வேண்டியதை பூர்த்தி பண்ணுவார்கள்.

# நைவேத்தியம் எதற்கு?

**நைவேத்தியம் செய்தால் ஸ்வாமி எங்கே சாப்பிடுகிறார் என்று சிலர் கேலியாகக் கேட்கிறார்கள். நிவேதனம் என்றால் சுவாமியைச் சாப்பிடச் சொல்வது என்று அர்த்தமே இல்லை. அவருக்குச் சாப்பிட்டு ஒன்றும் ஆகவேண்டாம். நம் நினைவைச் சுத்தம் செய்யத்தான் பூஜை முழுவதுமே தவிர, அதனால் ஸ்வாமிக்கு ஆவது எதுவுமில்லை. நிவேதயாமி என்றால் அறிவிக்கிறேன் என்றுதான் அர்த்தமே தவிர, உண்பிக்கிறேன் என்று அர்த்தம் அல்ல. "அப்பனே, இந்த வேளைக்கு உன் கருணையால் நீ இந்த அன்னத்தைக் கொடுத்திருக்கிறாய்" என்று அவருக்குத் தெரிவித்துவிட்டு, அவரின் நினைவோடு உண்ண வேண்டும்.**

**— காஞ்சி மகாபெரியவர்**



# பவளமல்லி உதிரும் காரணம்

அந்தக் காலத்தில் பவளமல்லிகா என்றொரு தேவதை இருந்தாள். அந்த தேவதைக்கு சூரியன் மீது காதல். சூரியனுக்காக எதையும் செய்வேனென்ற ரீதியில் பைத்தியமாய் இருந்த பவளமல்லிகா, கடைசியில் தன் காதலை சூரியனிடம் சொன்னாள்.

சூரியனோ என்னால் உன்னை ஏற்க முடியாது என்று சொன்னான். இதனால் மனம் வருந்திய பவள மல்லிகா சூரியனுடன் கடும் கோபம் கொண்டு இனிமேல் நீயிருக்கும் திசைக்கே வரமாட்டேன். என் தூய்மையான காதலை நீ தூக்கியெறிந்து விட்டாய். இனி என்றும் உன் முகத்தில் விழிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டு காதல் தோல்வி தாங்காமல் பாரிஜாத பூவாய் உருமாறினாள்.

அதனால் தான் இன்றும் பவளமல்லியெனும் பாரிஜாதம் இரவில் நிலவொளியில் இதழ்விரித்து, நறுமணம் பரப்பி மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தி சூரியன் உதிக்கும் முன்னமே தனது பூக்களை பூமியில் உதிர்த்து விடுகிறது.

விஷ்ணுவிற்கு உகந்தது பவள மல்லி. இதன் வேரில் ஆஞ்சநேயர் குடியிருக்கிறார். எனவே பெண்கள் இம்மலரை தலைக்கு சூடுவதில்லை. பாமா, ருக்மணி இருவருக்குமே இஷ்ட மலர் பவள மல்லி.

பொதுவாய் தரையில் விழுந்த மலரை சுவாமிக்கு சாற்றக்கூடாது. ஆனால் அந்த விதி பவளமல்லிக்கு பொருந்தாது. ஒருமுறை மதுரா பிருந்தாவனத்தில் கீழ் விழுந்த பவள மல்லியை ராதை தொடுத்து கொண்டிருக்க கிருஷ்ணர் பாரிஜாத நறுமணத்தில் மயங்கி ராதை கோர்த்த பவளமல்லி மாலையை நுகர்ந்து தன் கழுத்தில் அணிந்து கொண்டாராம். அன்றிலிருந்து தரை தொட்ட பவளமல்லி இறை சூடும் மலராயிற்று.

# ஹோமம் நடைபெறும் போது போடப்படும் திரவியங்களின் பலன்கள்

ஹோமம் நடைபெறும் போது போடப்படும் திரவியங்களின் விபரமும், அதனால் கிடைக்கும் பலன்களும் கீழே தரப்பட்டுள்ளன.

விளாம்பழம் : நினைத்த காரியம் ஜெயம், கொப்பரைத் தேங்காய் : சகலகாரிய சித்தி, இலுப்பைப்பூ - சர்வ வஸ்யம், பாக்குப்பழம் - ரோக நிவர்த்தி, மாதுளம்பழம் - வாக்குப் பலிதம், நார்த்தம்பழம் - திருஷ்டிதோஷ நிவர்த்தி, பூசணிக்காய் - சத்ருநாசம், கரும்புத் துண்டு - நேத்ர ரோக நிவர்த்தி, பூசணி, கரும்புத் துண்டு - சத்ருநாசம், எதிலும் வெற்றி, துரிஞ்சி நாரத்தை - சகல சம்பத் விருத்தி, எலுமிச்சம்பழம் - சோகநாசம் (கவலை தீர்த்தல்), நெல் பொரி - பயம் நீக்குதல், சந்தனம் - ஞானானந்தகரம், மஞ்சள் - வசீகரணம், பசும்பால் - ஆயுள் விருத்தி, பசுந்தயிர் - புத்ர விருத்தி, தேன் - வித்தை, சங்கீத விருத்தி, நெய் - தனலாபம், தேங்காய் - பதவி உயர்வு, பட்டு வஸ்திரம் - மங்களப் பிராப்தி, அன்னம், பசஷணம் - சஞ்சலமின்மை, சந்தோஷம், சமித்துக்கள் - அஷ்ட ஐஸ்வர்யம்.



சௌபாக்ய திரவியங்கள், பட்டுப்புடவை, பட்டுத் துண்டு, குங்குமச்சிமிழ், சீப்பு, மஞ்சள், புஷ்பம், எலுமிச்சம்பழம், வெற்றிலை பாக்கு, நெத்துக் காய், கிராம்பு, லவங்க சாமான்கள், ஸ்ரீ அஷ்ட லஷ்மி கடாக்ஷம் பெறவும், தீர்க்க சுமங்கலி பிராப்தி பெறவும் அருள் புரிகிறது. பரிகாரங்களில் மிக சிறந்து விளங்குவது ஹோமங்கள் ஆகும். தேவர்கள், சித்தர்கள், ஞானிகள், யோகிகள் தொடங்கி நாடாளும் அரசர்கள் முதல் சரித்திர காலம் தொட்டு இன்றுவரை தங்கள் இஷ்ட காரியங்களை யாகத்தின் மூலமே பூர்த்தி செய்து கொண்டனர்.

ஹோமத்தில் தீயில் நாம் இடும் மூலிகை பொருட்கள் தெய்வத்திற்கு உணவாகின்றன. இந்த ஹோமத்தீயில் இடும் மூலிகைக்கு சக்திகள் உள்ளன. உதாரணமாக புல்லுருவி சர்வ வசியத்தையும், தேள் கொடுக்கு இராஜ வசியத்தையும், செந்நாயுருவி ஆண் வசியத்தையும், நில ஊமத்தை பெண் வசியத்தையும், வெள்ளெருக்கு சத்ரு வசியத்தையும், சீந்தில் தேவ வசியத்திற்கும் இன்னும் பலப்பல மூலிகைகள் பல காரியங்களுக்கும் பயன்படுகிறது.

ஹோமத்தின் போது புனித நீரால் கும்பத்தை நிரப்பி, அலங்கரித்து வேண்டிய தெய்வங்களை அதில் ஆவாஹனம் செய்து (வரவழைத்து), பிறகு குத்து விளக்கில் அஷ்ட லட்சுமிகளை ஆவாஹனம் செய்து, ஹோமத்தீயில் தெய்வங்களை வசியம் செய்து, பால், பழம், தேன், மூலிகை சமித்துகளை ஹோமத்தில் தெய்வத்திற்கு உணவாக கொடுத்து, உரிய மந்திரம் சொல்லி நம் குறைகளை, தேவைகளை தெய்வத்திடம் கூறும் போது தெய்வங்கள் அதனை ஏற்று நமக்கு மகிழ்வுடன் பலன்களை தருகின்றன.

**சில ஹோமங்களும் அதன் பயன்களும் :**

**கணபதி ஹோமம் :** தடைகள் விலகும், எடுத்த காரியங்கள் வெற்றி அடையும்.

**சண்டி ஹோமம் :** பயம் போக்கும், வாழ்வில் தொடர்ந்து வரும் தரித்திரம் நீக்கும்.

**நவகிரஹ ஹோமம் :** கிரக தோஷங்கள் போக்கி மகிழ்ச்சியும், வளமும் உண்டாகும்.

**சுதர்ஸன ஹோமம் :** ஏவல் பில்லி சூனியங்கள் நீங்கும், சகல காரியங்களிலும் வெற்றி தரும்.

**ருத்ர ஹோமம் :** ஆயுள் விருத்தி உண்டாகும்.

**மிருத்யுஞ்ச ஹோமம் :** மந்தி தோஷம் போக்கும், பிரேத சாபம் நீக்கும்.

**புத்திர காமோஷ்டி ஹோமம் :** புத்திர பாக்கியத்தை உண்டாக்கும்.

**சுயம்வர கலா பார்வதி ஹோமம் :** பெண்களுக்கு திருமண தடை நீக்கி விரைவில் திருமணம் நடைபெறும்.

**ஸ்ரீ கந்தர்வ ராஜ ஹோமம் :** ஆண்களுக்கு திருமண தடை நீக்கி விரைவில் திருமணம் நடைபெறும்.

**லக்ஷ்மி குபேர ஹோமம் :** செல்வ வளம் தரும், பொருளாதார பெருக்கம் ஏற்படும்.

**தில ஹோமம் :** சனி தோஷம் போக்கும், இறந்தவர்களின் சாபங்களை நீக்கும்.

**ஸ்ரீ ப்ரத்யங்கிரா ஹோமம் :** எதிரிகளின் சூழ்ச்சிகள் தொல்லைகள் நீங்கி, வெற்றி மேல் வெற்றி உண்டாகும்.

**கண்திருஷ்டி ஹோமம் :** திருஷ்டி தோஷங்கள் விலகும், கரிய தடைகள் நீக்கும்.

**கால சர்ப்ப ஹோமம் :** திருமண தடை உத்தியோக தடை நீங்கும், வாழ்வில் சோதனைகள் நீங்கி சாதனைகள் மலரும்.

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

KODAMBAKKAM TIMES

MAMBALAM & T NAGAR EDITION

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

K K NAGAR & VADAPALANI EDITION

COVERING AREA :
Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

Please contact : 044 2484 4114
E-mail : kodambakkamtimes@yahoo.com



# ஐஸ்வர்யம்

ஐஸ்வர்யம் என்றால் பணக்கட்டுகளோ தங்க நகைகளோ மட்டும் அல்ல ... ஐஸ்வர்யம் பன்முக சிந்தனைகள்.

வீட்டு வாசலில், பெண்பிள்ளையின் கொலுசு ஒலி ஐஸ்வர்யம்.

வீட்டிற்கு வந்தவுடன், புன்னகையோடு வரவேற்கும் மனைவி ஐஸ்வர்யம்.

எவ்வளவு வளர்ந்தாலும் அப்பா திட்டும் திட்டு ஐஸ்வர்யம்.

அம்மா கையால் உணவு ஐஸ்வர்யம்.

பசுமையான மரங்கள், பயிர் நிலங்கள் ஐஸ்வர்யம்.

இளஞ்சூடு சூரியன் ஐஸ்வர்யம்.

பவுர்ணமி தினத்தில் சந்திரன் ஐஸ்வர்யம்.

உலகில் நம்மை தழுவிக்கொண்டிருக்கும் இந்த பஞ்ச பூதங்கள் ஐஸ்வர்யம்.

பால் வடியும் குழந்தையின் சிரிப்பு ஐஸ்வர்யம்.

இயற்கை அழகு ஐஸ்வர்யம்.

உதடுகளால் சிரிக்கும் உண்மையான சிரிப்பு ஐஸ்வர்யம்.

அவசரத்தில் உதவும் நண்பன் ஐஸ்வர்யம்.

புத்தியுள்ள குழந்தைகள் ஐஸ்வர்யம்.

தெய்வம் கொடுத்த உடல் ஆரோக்கியம், ஐஸ்வர்யம்.

ஒருவருக்காவது உதவி செய்யும் மனசு ஐஸ்வர்யம்.

ஐஸ்வர்யம் என்றால் கையில் எண்ணும் பணக்கட்டு அல்ல, கண்ணால் பார்க்கும் உலகம் ஐஸ்வர்யம். மனசு அடையும் சந்தோஷம் ஐஸ்வர்யம். நம்மை நல்வழி படுத்தும் குருவின் அறிவுரைகள் ஐஸ்வர்யம். நம்மை சுற்றி நல்ல நண்பர்கள் உறவுகள் இருந்தால் ஐஸ்வர்யம்.

# இன்று ஒரு தகவல்

எந்தக் கடவுளுக்கும் இல்லாத சிறப்பு முருகப்பெருமானுக்கு உண்டு, குழந்தை குமரன் மற்றும் வயோதிக கோலத்தில் காட்சி அருள்பவர் இவர் மட்டுமே. குழந்தை வேலாயுத சுவாமி ஆக பழநி அடிவாரத்தில் உள்ள திரு ஆவினன் குடியிலும், குமரன் ஆக திருப்பரங்குன்றம், திருத்தணி கோவில்களிலும், வயோதிகர் ஆக சிவகங்கை மாவட்டதில் உள்ள பிரான் மலையிலும் அருள்பாலிக்கிறார். விநாயகர், முருகன், சிவபெருமான், பெருமாள் ஆக இந்த நான்கு தெய்வங்களின் அருளை ஒரு சேர பெற "முருகனே, செந்தில் முதல்வனே, மாயோன் மருகனே, ஈசன் மகனே, ஆனைமுகன் தம்பியே நின்னுடைய தண்டைக் காலினை எப்பொழுதும் நம்பியே கைதொழுவேன் நான்" என்ற பாடலை மனமுருகி பாடினால் நன்மை கிடைக்கும்.

ஓம் சரவணபவாய நமஹ

---

# நவம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்

நவம்பர் : 1 - வெள்ளி - அம்மாவாசை, லஷ்மி பூஜை, கேதார கௌரீ விரதம்

நவம்பர் : 2 - சனி - ஸ்கந்த ஷஷ்டி உற்சவம் ஆரம்பம்

நவம்பர் : 7 - வியாழன் - ஸ்கந்தஷஷ்டி, சூரஸம்ஹாரம்

நவம்பர் : 12 - செவ்வாய் - ஸர்வ உத்தான ஏகாதசி

நவம்பர் : 13 - புதன் - பிரதோஷம்

நவம்பர் : 15 - வெள்ளி - பௌர்ணமி, அன்னாபிஷேகம், துலாஸ்நானபூர்த்தி, கடைமுகம்

நவம்பர் : 16 - சனி - முடவன்முழுக்கு

நவம்பர் : 19 - செவ்வாய் - சங்கடஹர சதுர்த்தி

நவம்பர் : 22 - வெள்ளி - காலபைரவாஷ்டமி


நவம்பர் : 28 - வியாழன் - பிரதோஷம்

# சூரிய நமஸ்கார மந்திரங்கள்

சூரிய நமஸ்காரத்தின்போது உச்சரிக்கப்படும் 12 மந்திரங்களும் அதன் அர்த்தங்களும்.

உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் வாழ்வதற்கு சூரியனே காரணம்.

சூரியனை கடவுளாக வணங்கும் பழக்கம் பழங்காலம் தொட்டே இருந்து வருகிறது.




சூரிய நமஸ்காரம் நமது ஆன்மீக வாழ்வுடனும், ஆரோக்கிய வாழ்வுடனும் ஒன்றிய அறிவியல் மருத்துவக் கூறுகளை உள்ளடக்கிய நோய் தீர்க்கும் யோக பயிற்சியாகும்.

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா, என்ற பழமொழி உண்டு.

சூரிய நமஸ்காரத்திற்கும் கண்ணிற்கும் உள்ள நெருக்கமான தொடர்பை இது காட்டுகிறது.

கண்ணொளி வழங்கும் சூரியனின் சக்தி உடலில் ஏற்படும் நோய்களை நீக்கி உடல் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கிறது.

அதிகாலை நேரத்தில் நம் உடலில் படும் சூரிய ஒளி தேக ஆரோக்கியத்திற்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

இதைத்தான் நமது பாரத பூமியில் வாழ்ந்த சித்தர்கள் காலை வெயிலில்


ASTROLOGY
- VASTU CONSULTANT -
PERFECT VASTU FOR HOME FACTORY OFFICE. MANY CLIENTS BENEFITTED WITH VASTU PREDICTIONS WITH US. ONLY WITH APPOINTMENT
94441 64859

ஆரம்பிக்கும் பித்தம், மாலை வெயிலில் தணிந்து போகும் என்றனர்.

சூரிய ஒளியைக் கொண்டு கொடிய நோயான மஞ்சள் காமாலையையும் குணப்படுத்தலாம் என்கிறது அதர்வண வேதம்.

இதனை அடிப்படையாக்க கொண்டு தோன்றியதுதான் சன்பாத் எனப்படும் சூரிய ஒளிக் குளியல். சூரியக் குளியலால் சிறுவர்களின் மன ஆற்றல் பத்து முதல் இருபது சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக மேலை நாட்டு நவீன மருத்துவ ஆய்வு நிரூபித்துள்ளது.

சூரிய நமஸ்காரம் செய்வதற்கு மிகவும் உகந்த நேரம் சூரிய உதயமாகும் அதிகாலை நேரம். இளஞ் சூரியனிலிருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்கள் எண்ணற்ற நோய் எதிர்ப்பு சக்தியைக் கொண்டுள்ளது.

இரவில் தூக்கத்தால் உடலுக்கும், மனத்திற்கும் ஓய்வு கிடைப்பதால் அதிகாலையில் உடற்தசைகள் உடற்பயிற்சி செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

மூளையின் அலைகள், அதிர்வுகள் குறைந்து அமைதியாக இருப்பதும் அதிகாலையிதான். அதிகாலையில் வெப்பம் குறைவாக இருப்பாதால் சூரிய நமஸ்கார பயிற்சியின் போது நமது உடலும் உள்ளமும் சோர்வடைவதில்லை.

சூரிய நமஸ்காரம் செய்வதற்கு உகந்த திசை கிழக்கு. சூரியனின் கதிர்கள் உடல் முழுவதும் படும்வகையில் சுத்தமான காற்று இருக்கக் கூடிய திறந்த வெளியில் நின்றபடி செய்ய வேண்டும்.

12 மந்திரங்களை சொல்ல சூரிய நமஸ்காரம் செய்து வந்தால் நம் உடல் நோய்கள் யாவும் தீர்ந்துவிடும்.

ஓம் மித்ராய நமஹ - சிறந்த நண்பன்
ஓம் ரவயே நமஹ - போற்றுதலுக்குரியவன்
ஓம் சூர்யாய நமஹ - ஊக்கம் அளிப்பவன்
ஓம் பானவே நமஹ - அழகூட்டுபவன்
ஓம் ககாய நமஹ - உணர்வுகளுக்கு வலிமை தருபவன்
ஓம் பூஷ்ணே நமஹ - புத்துணர்ச்சி தருபவன்
ஓம் ஹிரண்யகர்ப்பாய நமஹ - ஆற்றல் அளிப்பவன்
ஓம் மரீசயே நமஹ - நோய்களை அழிப்பவன்
ஓம் ஆதித்யாய நமஹ - கவர்ந்திழுப்பவன்
ஓம் சவித்ரே நமஹ - சிருஷ்டிப்பவன்
ஓம் அர்க்காய நமஹ - வணக்கத்திற்கு உரியவன்
ஓம் பாஸ்காராய நமஹ - ஒளிமிகுந்து பிரகாசிப்பவன்

மேற்கண்ட மந்திரத்தை உச்சரித்தவாறு சூரிய நமஸ்காரம் செய்யும் போது நமது மனம் சிதறாமல் ஒரு முகப்படுகிறது.

மந்திரத்தை உச்சரிக்கும்போது அதனதிர்வு நமது உடலின் எல்லா பகுதிகளுக்கும் சென்று பல உணர்வுகளை ஏற்படுத்தும் என்பது விஞ்ஞான பூர்வமான உண்மையாகும்.

# KRISHNA DELISH COFFEE




எங்களிடம் தரமான காபி
கொட்டை அரைத்து தரப்படும்

1 கிலோ காபி பவுடர்

ரூ 680 மட்டுமே

* Condition Apply

நம்ம ஆத்து காபி

FILTER COFFEE RS.15 only

COFFEE POWDER
DOOR DELIVERY FREE
ALSO AVAILABLE

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore
Ganapathy's
CELEBRATING
82 Years
ANNIVERSARY
Since 1942

மயிலாப்பூர்
# கணபதிஸ்®
ஸ்தாபிதம் 1942

## வெண்ணெய் & நெய்

### *பாரம்பரியமாக 1942 முதல்*

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com

ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com